வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu — ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    04.08.2026 செவ்வாய்க்கிழமை    இதழ் : 210    பக்கங்கள் : 08

# 6 தமிழ் பேசும் கட்சிகளுடன் ஜனாதிபதி விரிவான பேச்சு!

**புதிய அரசியலமைப்பு, மாகாண சபை தேர்தல், காணி வீடமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்**



கொழும்பு, ஒக. 04

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த ஆறு கட்சிகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி செயலகத்தில் நேற்று சந்தித்து, புதிய அரசமைப்பு, மாகாண சபைத் தேர்தல்கள், வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களின் காணி, வீடமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடினார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள தகவலின் படி, முழுமையான அரசியலமைப்பு திருத்தத்தின் அவசியம், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் உள்ள சவால்கள், வடக்கு, கிழக்கு மற்றும்

07

**பசிபிக் சூறாவளி தாக்கம்;**

## ஓகஸ்ட் 6 இற்கு பின் நாட்டில் மீண்டும் மழை தீவிரமடையும்

கொழும்பு, ஒக். 04

தற்போது நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற வானிலை இன்று நண்பகலுக்குப் பின்னர் படிப்படியாகக் குறையும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும், பசிபிக் பெருங்கடலில் உருவாகி வரும் சூறாவளி காரணமாக ஆகஸ்ட் 6 ஆம் திகதிக்குப் பின்னர் மீண்டும் மழை அதிகரிக்கும் சாத்தியம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்னகே, தற்போதைய கொந்தளிப்பான வானிலை நாளை நண்பகலுக்குப் பின்னர் தளரத் தொடங்கும் என்றார்.

இருப்பினும், ஜப்பானின் தெற்குப் பகுதியில் பசிபிக் பெருங்கடலில் உருவாகி வரும்

07

## கோட்டாவின் மனு மீதான உத்தரவு செப்ரெம்பர் 22 இற்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக. 04

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் தம்மைக் கைது செய்வதையோ அல்லது தடுத்து வைப்பதையோ தடுக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த எழுத்தாணை மனு மீதான உத்தரவை மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

குறித்த மனுவை மேலதிக விசாரணைக்காக ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பது தொடர்பான உத்தரவே எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

07

## வடக்கு மாகாண சுகாதாரப் பணி உதவியாளர் 300 வெற்றிடங்களுக்கு நேர்முக தேர்வு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 04

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் நிலவும் சுகாதாரப் பணி உதவியாளர் (தரம் III) பதவிக்கான 300 வெற்றிடங்களை நிரப்புவதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுகள் நேற்று திங்கட்கிழமை பண்ணையில் அமைந்துள்ள சுகாதார கிராமத்தில் ஆரம்பமாகின.

மொத்தம் 852 வெற்றிடங்கள் காணப்படும் நிலையில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கமைய முதல் கட்டமாக 300 பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஒகஸ்ட் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த நேர்முகத் தேர்வுகளுக்காக ஆறு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

07

## சீரற்ற காலநிலை; 171 நிவாரண குழுக்கள் தயார் நிலையில்

கொழும்பு, ஒக். 04

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்படக்கூடிய வெள்ளம் மற்றும் திடீர் மண்சரிவு அபாயங்களை

07

## ஜனாதிபதி, பாராளுமன்றப் பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றின் கருத்து கோர அரசு நடவடிக்கை!

**தயாசிறி ஜயசேகர எம்.பி. குற்றச்சாட்டு**



கொழும்பு, ஒக. 04

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் தொடர்பாக அரசியலமைப்பில் காணப்படுவதாகக் கூறப்படும் முரண்பாடு குறித்து உயர்நீதிமன்றத்தின் கருத்தை அரசாங்கம் கோர முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசியலமைப்பின் ஆங்கில மற்றும் சிங்கள மொழிப் பிரதிகளில் உள்ள வேறுபாட்டைச் சீர்செய்வதற்காக சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவரின் கூற்றுப்படி,

07

## கண்டி, நுவரெலியா பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

கொழும்பு, ஒக. 04

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளும் இன்று செவ்வாய்க்கிழமை மூடப்படவுள்ளதாக கல்வி அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

07

## 40 மில்லியன் ரூபா நிதி மூலம் கசூரினா கடற்கரை அபிவிருத்தி

**யாழ்.சுற்றுலாவை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் திட்டங்கள் விரைவில்**

யாழ்ப்பாணம், ஒக. 04

காரைநகர் கசூரினா கடற்கரையை ரூ.40 மில்லியன் நிதியில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இருநாள் விஜயம் மேற்கொண்டுள்ள அவர், நேற்று காங்கேசன்துறை மற்றும் காரைநகர் கசூரினா கடற்கரைகளுக்கு கள விஜயம் மேற்கொண்டு, முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன்

07

## மஹர சிறைச்சாலை மோதல் ரூபா 15 கோடிக்கு மேல் சேதம்!

**உரிய விசாரணைகள் தீவிரம்**

கொழும்பு, ஒக. 04

மஹர சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வன்முறை மோதலால் சிறைச்சாலையின் கட்டடங்கள் மற்றும் சொத்துக்களுக்கு 15 கோடி ரூபாய்க்கும் அதிகமான சேதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவம் தொடர்பான அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டதுடன், நீதவான் விசாரணையும் நேற்று முன் தினம் நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதலில் கைதி ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் 10 கைதிகள் காயமடைந்து ராகம

07

## நீதிபதிகள் ஓய்வு வயது நீடிப்பு; 4 பீட மகாநாயக்கர்கள் எதிர்ப்பு

**சட்டத்தரணிகள் சங்கம் கூறுகிறது**

கொழும்பு, ஒக. 04

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிக்கும் அரசியலமைப்புத் திருத்தம் பொருத்தமற்றது என்ற நிலைப்பாட்டை நான்கு பீடங்களின் மகாநாயக்கர்கள் வெளிப்படுத்தியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ராஜீவ் அமரசூரிய, மல்வத்து மகாவிகாரையின் மகாநாயக்க தேரர் இந்த விடயத்தைத் தமக்குத் தெரிவித்ததாக கூறினார். மேலும், இந்த நிலைப்பாடு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்

07

## மூன்றாம் காலாண்டில் மின் கட்டணம் மாறாது!

**பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு**

கொழும்பு, ஒக. 04

2026 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான மின்கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்கட்டணத்தை மீளாய்வு செய்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில், தற்போதைய மின்கட்டணக் கட்டமைப்பில் மாற்றம் செய்யத் தேவையில்லை என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சார உற்பத்திச் செலவுகள், வருமானம், மின்சார நுகர்வு நிலை மற்றும் மின்சாரத்

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளருக்கு எதிராக வடக்கு ஆளுநரிடம் உறுப்பினர்கள் முறைப்பாடு!

## சபை தீர்மானங்களுக்கு முரணாக செயற்படுவதாக குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக. 04

வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளரின் நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனிடம் நேற்று திங்கட்கிழமை எழுத்துமூல முறைப்பாடு ஒன்றை கையளித்துள்ளனர்.

முறைப்பாட்டில், பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக கீரிமலைப் பகுதியில் தொடர்ச்சியாக குப்பைகள் மற்றும் பல்வேறு கழிவுகள் கொட்டப்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சபையின் அனுமதி உக்கிய மண்ணைக் கொட்டுவதற்கே வழங்கப்பட்டிருந்த போதிலும், இலத்திரனியல் கழிவுகள், கண்ணாடிப் பொருட்கள், சிகை அலங்கார நிலையக் கழிவுகள் மற்றும் நீர் தேங்கக்கூடிய தகரடப்பாக்கள் உள்ளிட்ட பல்வேறு கழிவுகள் சட்டவிரோதமாக கொட்டப்படுவதாக உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பலமுறை தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதிலும் எந்த ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், தற்போது குப்பைகள் கொட்டப்படும் பகுதி குடியிருப்புகள், புனித இடங்கள் மற்றும் ஆலயங்களுக்கு அருகில் அமைந்துள்ளதால் சுற்றுச்சூழலுக்கும் அந்தப் பகுதிகளின் புனிதத் தன்மைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஜூலை 18ஆம் திகதி நடைபெற்ற பிரதேச சபை அமர்வில், ஏற்கனவே கொட்டப்பட்டுள்ள குப்பைகள் அகற்றப்படும் என்றும் இனிமேல் அப்பகுதியில் குப்பைகள் கொட்டப்படமாட்டாது என்றும் தவிசாளர் உறுதியளித்திருந்ததாக உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் அந்த உறுதிமொழிக்கு மாறாக தொடர்ந்து குப்பைகள் கொட் டப்படுவதுடன், அவை எரி யூட்டப்பட்டும் வருவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள் ளனர்.

அதேவேளை, மல்லாகம் பொதுச் சந்தைக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்பிலும் உறுப்பினர்கள் ஆளுநரின் கவனத்தை ஈர்த்துள்ளனர். முறையற்ற வடிவமைப்பு அல்லது போதிய மேற்பார்வையின்மை காரணமாக சில மாதங்களுக்கு முன்னர் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் பல தொழிலாளர்கள் காயமடைந்த தாகவும், உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் இன்றி தற்காலிக தீர்வுகளுடன் கட்டுமானப் பணிகள் தொடரப்படுவதாக சந்தேகம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, கீரிமலைப் பகுதியில் கொட்டப்பட்டுள்ள அனைத்து குப்பை மற்றும் கழிவுகளையும் உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கவும், மல்லாகம் பொதுச் சந்தை கட்டுமானப் பணிகள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தவும், பிரதேச சபைத் தீர்மானங் களை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வடமாகாண ஆளுநரிடம் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சிங்களவரின் வரிப்பணத்தில் செம்மணிப் புதைகுழி அகழ்வு!

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஒக. 04

இலங்கையை குற்றச்செயல்களின் இராச்சியமாக சர்வதேசத்துக்கு காண்பிப்பதற்காக சிங்களவர்களின் வரிப்பணத்துடன் செம்மணி மனிதப்புதைக்குழி அகழப்படுகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பு சிங்களவர்களை கொன்று புதைத்த புதைகுழிகள் பற்றி காணாமல் போனோர் அலுவ லகம் ஏன் கவனம் செலுத்த வில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ கேள்வியெ ழுப்பினார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-செம்மணி மனிதப் புதைக்குழி அகழ்வுப் பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்படுகின்றன. அதற்கு நீதி கோரி கத்தோலிக்க அருட்தந்தையர்கள் கொழும்பிலும், யாழ்ப் பாணத்திலும் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இலங்கை குற்றங்கள் நிறைந்த இராச்சியம், இங்கு யுத்தக்குற்றங்களும், இனவழிப்பும் இடம்பெற்றுள்ளன என்று சர்வதேச அரங்குக்கு காண்பிக்கும் செயற்பாடுகளே தற்போது இடம்பெறுகின்றன.

இந்த நாட்டில் வரி செலுத்துவதில் சிங்களவர்கள் பெரும்பான்மையானவர்களாக உள்ளார்கள். சிங்களவர்களின் வரிப்பணத்தைக் கொண்டு காணாமல் போனோர் அலுவலகம் செம்மணி மனிதப் புதைக்குழி அகழ்வுப் பணிகளை இந்த அரசாங்கம் வந்ததன் பின்னர் தீவிரப்படுத்தியுள்ளது.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் அரச நிறுவனமாக காணப்பட்டாலும் அது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்படுகிறது. புலிகள் அமைப்பால் கொலை செய் யப்பட்டு புதைக்கப்பட்ட சிங்கள பொலிஸார், சிங்கள மக்கள் பற்றி காணாமல் போனோர் அலுவலகம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை-என்றார். (அ)

# கிளிநொச்சி நீச்சல் தடாக தொகுதி புனரமைப்புக்கு அடிக்கல் நடுகை!

கிளிநொச்சி, ஒக. 04

கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டு கட்டடத் தொகுதியில் உள்ள நீச்சல் தடாகத் தொகுதியின் புனரமைப்பின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

ரூபா 28 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்பட வுள்ள இத்திட்டத்தின் மூலம் நீச்சல் தடாகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேலும் மேம்படுத்தப்பட்டு, வட மாகாண விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களுக்கான நவீன பயிற்சி வசதிகள் உருவாக் கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார். மேலும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளி தரன், உதவி மாவட்டச்செயலர், பிரதம பொறியியலாளர், அரச அதிகாரிகள், விளையாட்டுத் துறை அதிகாரிகள், விளை யாட்டு வீரர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இத்திட்டம் வட மாகாணத்தின் விளையாட்டு அபிவிருத்திக்கு புதிய ஊக்கத்தை வழங்குவதுடன், தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான பயிற்சிகள் மற்றும் போட்டிகளை நடத்துவதற்கான வசதிகளும் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# டெங்கினால் கர்ப்பிணி உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 04

டெங்கு நோயால் 7 மாத கர்ப்பிணி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். வாதுவை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டார்.

மருத்துவர்களின் தீவிர முயற்சிகள்இருந்தபோதிலும் தாயையோ சேயையோ காப்பாற்ற முடியாமல் போனது.

2026 ஆம் ஆண்டில் இதுவரை இலங்கையில் 86,386 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 62 பேர் உயிரிழந்துள்ளதுடன், உயிரிழப்பு விகிதம் 0.07மூ ஆக உள்ளது. ஜூலை மாதத்தில் மட்டும் சுமார் 30,000 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், ஓகஸ்ட் மாதத்தில் இதுவரை 1,000 இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகியுள்ளன. (அ)

# ஊர்காவற்றுறை-காரைநகர் பயணிகள் கடற்பாதை சேதம்

## அவசர சீரமைப்பை வலியுறுத்தும் பயணிகள்



யாழ்ப்பாணம், ஒக. 04

ஊர்காவற்றுறை-காரைநகர் இடையே சேவை யில் ஈடுபட்டுள்ள பயணிகள் கடற்பாதையின் அடிச்சட்டம் பல இடங்களில் வெடித்து சேதமடைந்துள்ளதால், பயணிகளும் வாகன ஓட்டுநர்களும் நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதையின் சேதம் காரணமாக, குறிப்பாக மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களை பாதுகாப்பாக பாதையில் ஏற்றி இறக்குவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. மேலும், பயணி களின் கால்களில் காயம் ஏற்படும் அபாயமும் காணப்படுவதாக பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பயணிகள் பாதையை அரச உத்தியோகத் தர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தினசரி அதிகளவில் பயன்படுத்தி வரும் நிலையில், நீண்டகாலமாக பழுதுகள் சீரமைக்கப்படாமல் இருப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, சேதமடைந்துள்ள பகுதிகளை உடனடியாகப் புனரமைத்து, பாதுகாப்பான மற்றும் இடையூறற்ற போக்குவரத்து சேவையை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# ஹரக் கட்டாவை அதியுயர் பாதுகாப்பு சிறைக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, ஒக. 04

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு உறுப்பினரான "ஹரக் கட்டா" என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்னவை பொருத்தமான அதியுயர் பாதுகாப்புடைய சிறைச்சாலைக்கு மாற்ற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் அண்மையில் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது தங்காலை பழைய சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஹரக் கட்டாவை பலத்த பாதுகாப்பு வசதிகள் கொண்ட சிறைச்சாலைக்கு மாற்றுமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் நோக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் இருந்தபோது தப்பிச் செல்லச் சதித் திட்டம் தீட்டியதாக ஹரக் கட்டா உள்ளிட்ட ஐந்து பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்கை தொடர முடியாது என நீதிமன்றம் அண்மையில் தீர்மானித்திருந்தது.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி புத்திக சி. ராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இதையடுத்து, பிரதிவாதிகள் தாக்கல் செய்திருந்த பிணை மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், அவை தொடர்பான உத்தரவு எதிர்வரும் ஓகஸ்ட் 20ஆம் திகதி வழங்கப்படும் என நீதிபதி அறிவித்தார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
04.08.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், ஆடி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ்பேசும் கட்சிகளிடம் ஜனாதிபதி புதிதாக என்ன சொன்னார்?

தமிழ்பேசும் சமூகங்களுக்கு பொதுவானவையாக இருக்கும் பிரச்சினைகளுக்காக குரல்கொடுப்பதற்காக அண்மையில் "பொதுமேடை" ஒன்றை அமைக்க ஒன்றிணைந்த ஆறு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றையதினம் காலை ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவை சந்தித்து இரு மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கான செயன்முறைகளில் தாமதம் ஏற்பட்ட போதிலும், விரைவில் அவை ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி இவர்களிடம் கூறியிருக்கிறார்.

மாகாணசபை தேர்தல்களை தாமதிக்கப்படுவது குறித்து கருத்து தெரிவித்த திசநாயக்க எந்த முறையில் அந்த தேர்தல்களை நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானம் கிடைத்ததும் அவை நடத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அது காலத்தைக் கடத்துவதற்கான ஒரு செயற்பாடு என்றும் இந்த கட்சிகளின் பிரதிநிதிகள் கூறியபோது ஜனாதிபதி எத்தகைய பிரதிபலிப்பை வெளிக்காட்டினார் என்று தெரியவரவில்லை.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் அவர்களிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை என்றும் இராணுவத்தின் வசமிருக்கும் அத்தகைய காணிகளை விடுவிப்பதில் இருக்கக்கூடிய நெருக்கடிகள் குறித்து விளக்கம் கேட்டு இராணுவத்திடம் தான் கோரியிருக்கும் அறிக்கை கிடைத்ததும் அந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

மலையக மக்களுக்கு காணிகளை பகிர்ந்தளிப்பதில் சில நெருக்கடிகள் இருக்கின்றன என்று கூறிய திசநாயக்க மலையகப் பெருந்தோட்டங்களை நிருவகிக்கும் கம்பனிகள் இது விடயத்தில் இறுக்கமான நிலைப்பாட்டில் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி தமிழ்பேசும் கட்சிகளிடம் கூறிய இந்த விடயங்களை உள்ளடக்கி ஜனாதிபதி ஊடகப் பிரிவும் அறிக்கையொன்றை வெளியிட்டது. தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள். ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து ஜனாதிபதி செயலகத்துக்கு வெளியே ஊடகவியலாளர்களிடம் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்ததை காணக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி நேற்றைய பேச்சுவார்த்தையில் தெரிவித்த கருத்துக்கள் ஒன்றும் புதியவை அல்ல. சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் அவரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தலைவர்களும் இதே கருத்துகளை ஏற்கெனவே பல தடவைகள் கூறியிருக்கிறார்கள்.

புதிதாக எதையாவது அவர் சொல்வாரே என்று எதிர்பார்த்து தமிழ்பேசும் கட்சிகளின் பிரதிநிதிகள் சந்திப்புக்கு சென்றார்களோ தெரியவில்லை. மேற்கூறப்பட்ட பிரச்சினைகளில் முன்னைய அரசாங்கங்களின் நிலைப்பாடுகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடுகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க எந்த வேறுபாடும் இல்லை என்பது மீண்டும் தெளிவாகியிருக்கிறது.

# இந்தியா சீனாவிடம் சரணடையக் கூடாது; அமெரிக்காவைச் சார்ந்திருக்கக் கூடாது

(நேற்றைய மூன்றாம் பக்க தொடர்ச்சி)

பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் மற்றும் அணுசக்தி விநியோகஸ்தர் குழுவில் இந்தியா உறுப்பினராவதற்கான நியாயமான ஆசைகளை சீனா தடுத்துள்ளது.

எல்லைத் தகராறுக்கு எந்தவொரு அடிப்படையான தீர்வும் இன்றி, அல்லது பெய்ஜிங்கின் விரோதப் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்காமல், இந்தியா சீன மூலதனம் மற்றும் சந்தை அணுகுமுறைக்குக் கதவுகளைத் திறந்தால், அது சீனா இந்தியாவை வளைத்துப்போடும் முயற்சிக்குத் தானே நிதியளிப்பதற்குச் சமமாகும்.

ஒரு இணக்கமான நுகர்வோர் சந்தையாக பில்லியன் கணக்கான டொலர்களை சீனப் பொக்கிஷத்தில் கொட்டுவது, இந்தியா மீதான சமச்சீரற்ற வர்த்தக பற்றாக்குறையை மட்டுமே அதிகரிக்கும் (இப்போது ஆண்டு உபரி 100 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளது). மிகவும் ஆபத்தான விடயம் என்னவென்றால், இது இந்தியப் பொருளாதாரத்தின் மீதான பொருளாதாரக் கட்டுப்பாட்டை பெய்ஜிங்கிடம் ஒப்படைக்கிறது.

எதிர்கால நெருக்கடியின் போது, முக்கியமான கூறுகளைத் துண்டிப்போம் என்ற அச்சுறுத்தல் இந்தியத் தொழில்துறையை முடக்கிவிடும்.

புதுடில்லியை சுயாதீனமான உத்தி ரீதியான முடிவுகளை எடுக்க முடியாமல் செய்வதே பெய்ஜிங்கின் நோக்கமாகும்.

பொருளாதார பதற்றங்களைத் தணிப்பது எல்லையை நிரந்தரமாக வரையறுக்க வழிவகுக்கும் என்று உறவுகளைச் சீரமைக்க விரும்புபவர்கள் வாதிடுகின்றனர். ஆனால் யதார்த்தத்தில் அதற்கு நேர்மாறானதுதான் உண்மை. சீனா அதிகாரத்தை மட்டுமே மதிக்கும், மேலும் பலவீனத்தைச் சுரண்டிக் கொள்ளும்.

இந்தியா தனது பொருளாதார பலத்தைச் சரணடையச் செய்து, நீண்டகால மோதலைத் தாங்க முடியாது என்ற சமிக்ஞையை வெளிப்படுத்தினால், தனது பலமனை அழுத்த உத்தி செயல்படுகிறது என்று பெய்ஜிங் முடிவுக்கு வரும். சீனா மீண்டும் இந்தியாவை முற்றிலும் சார்ந்திருக்கும் நிலைக்குக் கொண்டுவரும் வரை காத்திருக்கும்.

இறுதியில் சீனா நிரந்தர எல்லைத் தீர்வைப் பற்றிப் பேசத் தயார் என்று முடிவு செய்யும் போது, அது முழுமையான ஆதிக்க நிலையிலிருந்தே தனது நிபந்தனைகளை விதிக்கும். சீனத் தொழில்நுட்பத்தைச் சார்ந்திருக்கும், மேலும் பொருளாதார சீர்குலைவு அச்சுறுத்தலுக்குப் பயப்படும் இந்தியா, தமக்கு மிகவும் பாதகமான ஒப்பந்தங்கள் மற்றும்சீனாவின் பிராந்திய செல்வாக்கு நிலையை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்காது.

பேரம் பேசும் சக்தி (Leverage) ஒருமுறை இழக்கப்பட்டால், அதை எளிதில் திரும்பப் பெற முடியாது. கல்வான் சம்பவத்திற்குப் பிறகு சீன செயலிகள், முதலீடுகள் மற்றும் தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் வெறும் உணர்ச்சிப்பூர்வமான எதிர்வினைகள் அல்ல் அவை முக்கிய மான இராஜதந் திர பலமாகும்.


சசி தரூர்

சிறிய பொருளாதார நிவாரணத்திற்காக அவற்றை அகற்றுவது ஒரு தலைப்பட்சமான ஆயுதக் குறைப்புக்குச் சமமாகும்.

இந்தியா சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு சிக்கலான நிலையில் உள்ளது. ட்ரம்ப் நிர்வாகத்தின் கணிக்க முடியாத மாற்றங்கள், பாதுகாப்புக்கு வாஷிங்டனை மட்டுமே நம்பியிருப்பது புத்திசாலித்தனமல்ல என்பதைக் காட்டுகின்றன. இருப்பினும், அமெரிக்காவின் தூதர் செர்ஜியோ கோர் எவ்வளவு ஆர்வமாக இருந்தாலும், அமெரிக்கா எப்போதும் தனது சொந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய கணக்கீடுகளுக்கே முன்னுரிமை அளிக்கும்.

லடாக் எல்லைகளில் இந்தியா தனித்து நிற்கிறது என்பதை புதுடில்லி தெளிவுபடுத்திக்கொள்ள் வேண்டும்.

ஆயினும், வாஷிங்டன் ஒரு நம்பகமான பங்களிப்பாளர் அல்ல என்பதை உணர்வது என்பதற்காக, இந்தியா ஒரு விரோதமான அண்டை நாட்டின் கைகளில் போய் விழ வேண்டும் என்று அர்த்தமல்ல. இந்தியாவின் தேசிய நலன்களை அமெரிக்காவிற்கு அடகு வைப்பதற்கும், சீனாவிடம் நிபந்தனையற்ற பொருளாதார மற்றும் அரசியல் சரணடைதலை மேற்கொள்வதற்கும் இடையே மிகப்பெரிய உத்தி ரீதியான இடைவெளி உள்ளது.

**இந்தியா செல்ல வேண்டிய பாதை**

புதுடில்லிக்கான சரியான பாதை, உத்தி ரீதியான பொறுமை மற்றும் உள்நாட்டு வலுப்படுத்தல் ஆகும். இந்தியா தனது விநியோக சங்கிலி மீள்தன்மையை விரைவுபடுத்த வேண்டும், ஐரோப்பா, கிழக்கு ஆசியா மற்றும் "குளோபல் சவுத்" முழுவதிலும் உள்ள தனது வர்த்தக பங்காண்மைகளை பல்வகைப்படுத்த வேண்டும், மேலும் உள்நாட்டு உற்பத்தி திறன்களை தீவிரமாக உருவாக்க வேண்டும்.

சீனா, இந்தியாவின் வளர்ச்சிக்கு ஒரு கட்டமைப்பு ரீதியான, தலைமுறை தலைமுறையான சவாலை முன்வைக்கிறது என்பதை கடந்த பத்தாண்டு காலம் நிரூபித்துள்ளது. வாஷிங்டனைப் பற்றிய பீதியால் அல்லது குறுகிய கால இலாபத்தை நோக்கமாகக் கொண்ட வணிகக் குழுவின் முறைப்பாடுகளினால் தூண்டப்படும் அவசர மறுபரிசீலனை, இந்தியா பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடியதாகவும், உத்தி ரீதியாக பலவீனமானதாகவும் மட்டுமே இருப்பதை உறுதி செய்யும்.

நாம் எந்தப் பக்கமும் சாய வேண்டிய" அவசியமில்லை. அதற்கு பதிலாக, நேராக நடப்பதற்கான தைரியத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(முற்றும்)

**(தி இந்து)**

**மோசமான வானிலை:**

# பேராதனைப் பல்கலைக்கழகம் மறு அறிவிப்பு வரை மூடப்பட்டது

கண்டி, ஒக. 04

நாட்டில் நிலவும் மோசமான வானிலை காரணமாக, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்விச் செயற்பாடுகளும் பரீட்சைகளும் மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் அத்தியாவசிய சேவைகள் வழமையானபடி தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், மாணவர்களின் பாதுகாப்பை முன்னிறுத்தி பல்வேறு விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பாக தங்களது சொந்த ஊர்களுக்குச் செல்லக்கூடிய மாணவர்கள் அவ்வாறு செல்லுமாறும், மோசமான வானிலை காரணமாக வீடு திரும்ப முடியாத மாணவர்கள் சரசவி மெதுர விடுதியைத் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக விடுதிகளில், விடுதி நிர்வாகத்திற்கு அறிவித்த பின்னர் தங்கியிருக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆபத்தான தனியார் தங்குமிடங்களில் வசிக்கும் மாணவர்கள் பாதுகாப்பு கருதி பல்கலைக்கழக விடுதிகளுக்கு வருமானால், அவர்களை ஏற்றுக்கொண்டு தேவையான பதிவுகளைப் பராமரிக்குமாறு விடுதி நிர்வாகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எந்த மாணவரும் விடுதிகளை விட்டு வெளியேற கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் பல்கலைக்கழகம் வலியுறுத்தியுள்ளது.

நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை அனைத்து மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினரும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என துணைவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் கையொப்பமிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்வீர்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக் கூடும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கடகம்**
இதுவரை இருந்த அலைச்சல் நீங்கள் குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப்பாருங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடிவடையும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய

**விருச்சிகம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு.

**தனுசு**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன்வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.

**மீனம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். அதிக வேலைச் சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். நீங்கும்.

# பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் பொங்கல் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது

முல்லைத்தீவு, ஒக. 04


முல்லைத்தீவு பழையசெம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல்விழா நேற்று முன்தினம் மிகச் சிறப்பாக இடப்பெற்றது.

இந்த ஆலயத்தில் பல்வேறு நெருக்கடிகள், இடையூறுகளுக்கு மத்தியிலும் ஆலய வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் வருடாந்த பொங்கல்விழா நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

நேற்று முன் தினம் காலை விசேட அபிசேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மதிய பூசை வழிபாடுகளின் பின்னர் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது

பொங்கல் விழா பூசைவழிபாடுகளில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பெருந்திரளான அடியவர்கள் பங்கேற்றிருந்தனர்.



தொடர்ந்து மாலையில் நாயாறு முனியப்பர் ஆலயத்தில் இருந்து மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு கச்சை நேர்ந்து மடைபரவி வளர்ந்து நேர்ந்து பொங்கல் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து பூசைகள் இடம்பெற்று பரிகளம் வழி விடுதலோடு நேற்று அதிகாலை வருடாந்த பொங்கல் இனிதே நிறைவடைந்தது.

(அ)

# மண்கும்பான் ஜீம்ஆ பள்ளிவாசலின் மீள்கட்டுமானப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 04

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் வெள்ளக்கடற்கரை ஜூம்ஆ பள்ளிவாசலின் மீள் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் அடிக்கல் நடும் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை பள்ளிவாசல் வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முனவ்பரின் பிரதம பங்குபற்றுலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பிரதிநிதியாக ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்.



வெள்ளக்கடற்கரை ஜூம்ஆ பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் கட்டுமானக் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வு, அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் (யாழ் ,கிளிநொச்சி கிளை) தலைவர் மௌலவி ஏ.எம். அப்துல் அஸீஸ் (காஸிமி) அவர்களின் கிராஅத்துடன் ஆரம்பமானது. பள்ளிவாசல் பொருளாளர் அல்ஹாஜ் எஸ். எச்.எம்.நியாஸின் தலைமையுரையைத் தொடர்ந்து, மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அ.அன்ரன் ஜேசுதாசன் கிராம மட்டத் தமிழ் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு விசேட உரையாற்றினார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.றஜீவன் மற்றும் க.இளங்குமரன், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.பைசல், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார், வேலனை பிரதேச செயலாளர் த.அகிலன் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர், கட்டுமானக் குழுவினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். அதிதிக ளின் உரைகளைத் தொடர்ந்து, பள்ளிவாசல் மீள் கட்டுமானத் துக்கான அடிக்கல் நடும் பிரதான நிகழ்வு இடம் பெற்றது. பின்னர் லுஹர் தொழுகை இடம்பெற்றது.

(அ)

# தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட மைதானம் நவீனமயமாக்கல்

யாழ்ப்பாணம், ஒக. 04

தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட மைதான நவீனமயமாக்கல் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றும் நிகழ்வு இடம் பெற்றது.

பின்னர் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதையடுத்து கரப்பந்தாட்ட மைதான நவீன மயமாக்கல் பணிகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், அதிதிகளின் உரைகள் இடம் பெற்றன.

இதன்போது விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்சுனில் குமார கமகே பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு கரப்பந்தாட்ட மைதான நவீனமயமாக்கல் பணிகளை அடிக்கல் நாட்டி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து வேலைத்திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதற்கான ஆவணத்தை அமைச்சர், தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழக உறுப்பினர்களிடம் கையளித்தார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீபவானந்தராஜா, இளங்குமரன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் கபிலன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகங்கா, மதகுருமார்கள், பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர், துறைசார்ந்த அரச அதிகாரிகள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெரும் நெருக்கடி நிலைமையில் இலங்கை போக்குவரத்துச் சபை!

## பஸ்கள், ஊழியர்கள் பற்றாகுறையால்



கொழும்பு, ஒக. 04

இலங்கை போக்குவரத்துச் சபையிடம் பழமையான பஸ்கள் அதிகளவில் உள்ள நிலையில், தற்போது சுமார் 5,016 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொதுத் தொழில் முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழு (கோப்) குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மொத்தம் 7,130 பஸ்களில், இயந்திரக் கோளாறுகள் மற்றும் சாரதிகள், நடத்துநர்கள் பற்றாக்குறை காரணமாக 2,100 இற்கும் அதிகமான பஸ்கள் தினசரி சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பற்றாக்குறையால் நாடு முழுவதும் சுமார் 300 முதல் 400 பஸ்கள் வரை சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவையில் ஈடுபடுத்தப்படாத பஸ்களில் சுமார் 200 பஸ்களைப் பழுதுபார்த்து மீண்டும் சேவையில் இணைக்க முடியும் என பாராளுமன்றக் குழுவிடம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

கோப் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள், மொத்த பஸ்களில் சுமார் 50 வீதமானவை 10 ஆண்டுகளுக்கும் அதிகமான பழமையானவை எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும், தினசரி சேவையில் ஈடுபடுத்தப்படும் சுமார் 1,780 பஸ்கள் 15 ஆண்டுகளுக்கும் அதிகமான பழமையானவை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் சஜீவ கனகரத்ன, தற்போது பயன்படுத்தக்கூடிய பஸ்களின் எண்ணிக்கை பயனுள்ள போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்குப் போதுமானதாக இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 7,339 பஸ்கள் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 500 பஸ்கள் சேவையிலிருந்து நீக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் பஸ் சேவையை வலுப்படுத்த இலங்கை போக்குவரத்துச் சபை திட்டமிட்டுள்ளதாக சஜீவ கனகரத்ன கூறியுள்ளார்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் தினசரி சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களின் எண்ணிக்கையை 5,600 ஆக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, 49 முதல் 54 ஆசனங்களைக் கொண்ட 600 சாதாரண பஸ்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், 200 சொகுசு பஸ்களை கொள்வனவு செய்வதும் இந்த ஆண்டுக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் நிறுவனத் திட்டங்களில் ஒன்றாகும்.

புதிதாகக் கொள்வனவு செய்யப்படும் மற்றும் பழுதுபார்க்கப்படும் சுமார் 1,000 பஸ்கள் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையில் இணைக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

# கடும் வறட்சி, உரத் தட்டுப்பாடு தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி!

கொழும்பு, ஒக. 04

நாட்டில் நிலவும் கடுமையான வறட்சி மற்றும் உரத் தட்டுப்பாடு காரணமாக பச்சைத் தேயிலைக் கொழுந்து உற்பத்தி 50 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தேசிய தேயிலை தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சமன் கீகனகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-தற்போதைய காலநிலை மற்றும் தொடர்ச்சியான உரத் தட்டுப்பாடு காரணமாக தேயிலை உற்பத்தியும் பாதியாக குறைந்துள்ளது. இதன்மூலம் நாட்டுக்கு கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணியில் சுமார் 40 வீதம் இழக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வழக்கமாக மாதந்தோறும் தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கை, 110 மில்லியன் அமெரிக்க டொலரை பெற்று வந்த போதிலும், தற்போது நிலவும் இத்தட்டுப்பாட்டினால் மாதத் துக்கு சுமார் 50 மில்லியன் டொலர் வரை நாட்டு இழப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இதற்கு முன்னர் ஒரு தேயிலை செடியிலிருந்து பெறப்பட்ட 3 கிலோ தேயிலைக் கொழுந்து அறுவடை தற்போது பாதியாக குறைந்துள்ளதுடன், ஏக்கர் நிலப்பரப்பில் கிடைக்கப்பெற்ற 400 கிலோ பச்சைத் தேயிலைக் கொழுந்து அறுவடை தற்போது 200 கிலோவாகக் குறைவடைந்துள்ளது-என்றார். (அ)

# கிழக்கில் வெப்பம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 04

கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் பகல் வேளையில் அதிகரித்த வெப்பநிலையை மனித உடலினால் உணரக்கூடியதாக இருக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அடிக்கடி மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மி.மீ. வரையிலான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

ஊவா மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் வறட்சியான வானிலை நிலவக்கூடும்.

வடமத்திய, மத்திய, சப்ரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை மாவட்டத்திலும் மணித்தியாலத்திற்கு சுமார் 40 - 50 கிலோமீற்றர் வேகத்தில் அடிக்கடி பலத்த காற்று வீசக் கூடும்.

சிலாபம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக மாத்தறை வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து காற்று வீசும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜூனில் மட்டும் வாகன இறக்குமதிக்கு 182 மில்லியன் டொலர் செலவு!

கொழும்பு, ஒக. 04

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையின்படி, 2026 ஜூன் மாதத்தில் மோட்டார் வாகன இறக்குமதிக்கான இலங்கையின் செலவினம் முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 27.1 வீதமாகக் குறைந்து 182 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அண்மைய வெளிநாட்டுத் துறை செயல்பாடு குறித்த அறிக்கையின்படி, தனிநபர் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் வணிக வாகனங்கள் ஆகிய இரண்டின் இறக்குமதியிலும் இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ஜூன் மாதத்தில் இந்த மந்தநிலை ஏற்பட்டபோதிலும், 2026 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வாகன இறக்குமதிக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவு 1.25 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

இது 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் பதிவான 1.57 பில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் ஒரு குறிப்பிடத்தக்கக் குறைவாகும். (அ)

# எல்நினோ காலநிலைத் தாக்கங்களை எதிர்கொள்வதற்கு விசேட பணிக்குழு

கொழும்பு, ஒக. 04

எதிர்வரும் காலத்தில் ஏற்படக்கூடிய எல்நினோ காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்வதற்காக விசேட பணிக்குழு ஒன்றை உடனடியாக அமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

சாத்தியமான இயற்கை அனர்த்தங்களை திறம்பட எதிர்கொள்ளும் வகையில், ஜனாதிபதியின் தலைமையில் இந்த பணிக்குழாம் அமைக்கப்பட்டு, அதனூடாக சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து செயற்பட முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# மஹர சிறையிலிருந்து வெலிக்கடைக்கு மாற்றப்பட்ட கைதிகள் மீது தாக்குதல்!

கொழும்பு, ஒக. 04

மஹர சிறைச்சாலையிலிருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக, சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு குற்றச்சாட்டு முன்வைத்துள்ளது.

குறித்த குழுவின் அறிக்கையின்படி, நேற்று முன்தினம் பிற்பகல் வெலிக்கடை சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மஹர சிறைச்சாலையிலிருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரே இந்தத் தாக்குதலுக்கு தலைமை தாங்கியதாகவும் அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் உடனடியாக சுயாதீன விசாரணை நடத்தவேண்டும் என்றும், இடமாற்றம் செய்யப்பட்ட கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்றும், சம்பவத்துக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குற்றச்சாட்டுகள் இதுவரை சிறைச் சாலை திணைக்களம் அல்லது சம்பந் தப்பட்ட அதிகாரிகள் உத்தியோகபூர்வ பதிலை வெளியிட வில்லை.

# பிரதான வீதியில் கற் பாறை சரிவு



ஹற்றன், ஒக. 04


ஹற்றன் - போடைஸ் பிரதான வீதியின் எல்பியன் பகுதியில் பாரிய அளவிலான கற் பாறை ஒன்று சரிந்து விழுந்ததால் நேற்று அதிகாலை போக்குவரத்துத் தடை ஏற்பட்டது.

இதன் காரணமாக, ஹற்றன் - போடைஸ் - டயகம செல்லும் வழியில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் மற்றும் சாரதிகள் அவதானமாக இருப்பதுடன், அவ்வீதியைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு ஹற்றன் வலய பொலிஸ் தலைமை அதிகாரி பிரதீப் வீரசேகர கேட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடும் மழையால் ஆறுகளின் நீர்மட்டம் வேகமாக உயர்வு!

## தாழ்நிலப் பகுதிகளுக்கு வெள்ள எச்சரிக்கை



கொழும்பு, ஒக. 04

நேற்று காலை முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் பதிவான பலத்த மழையினால் மகாவலி, களனி மற்றும் களுகங்கை ஆகிய பிரதான ஆறுகளின் மேல் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நீர்மட்டம் அதிவேகமாக அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஆபத்து ஏற்படக்கூடிய தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வெள்ளப் பெருக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் பொறியாளர் எல்.எஸ்.சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாவலப்பிட்டி, நானுஓயா மற்றும் வட்டவளை உள்ளிட்ட மகாவலி ஆற்றின் மேல் பகுதியில் 200 மில்லிமீற்றருக்கும் அதிகமான மிகக் கடும் மழை பதிவாகியுள்ளது.

நாவலப்பிட்டியிலிருந்து பேராதனை வரையான மகாவலி ஆற்றங்கரையை ஒட்டிய தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் சாத்தியமான வெள்ளப் பெருக்கு அபாயத்தைக் கருத்தில் கொண்டு எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தற்போதைக்கு நீர்மட்டம் படிப்படியாகவே அதிகரித்து வருகின்றது. "தித்வா" சூறாவளியின் போது ஏற்பட்ட பாரிய அளவிலான வெள்ளப் பெருக்கு அபாயம் தற்போது உருவாக வாய்ப்பில்லை என அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

லக்ஷபான, நோர்வூட் உள்ளிட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 100 மில்லி மீற்றர் முதல் 150 மில்லி மீற்றர் வரை மழை பதிவாகியுள்ளது.

கித்துள்கலை போன்ற மேல் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உயர்ந்த நீர்மட்டம் தற்போது சற்று குறைய ஆரம்பித்துள்ளது.

எனினும், ஹங்வெல்ல மற்றும் அவிசாவளைக்கு இடைப்பட்ட பகுதிகளிலும், அவிசாவளை, கித்துள்கலை மற்றும் நோர்வூட் ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட தாழ்நிலங்களிலும் வெள்ளப் பெருக்கு அபாயம் நிலவுகிறது. ஆற்றின் கீழ் நோக்கிய பகுதிகளில் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

இரத்தினபுரியின் மேல் பகுதிகளில் 100 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.


நீர்மட்டம் எச்சரிக்கை மட்டத்தை நெருங்கியுள்ள போதிலும், திடீர் உயர்வெதுவும் பதிவாகவில்லை. எனினும் தாழ்நிலப் பகுதிகள் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் உள்ளன.

ஈரவலயத்தில் உள்ள நில்வளவை மற்றும் ஜின் ஆற்றுப் பகுதிகளில் 50 மி.மீ முதல் 75 மி.மீ வரை மழை பதிவாகியுள்ளது. எனினும் இவை உடனடியாக வெள்ளப்பெருக்கு மட்டத்தை எட்டாது என எதிர்பார்க்கப்படுகிறது.

மஹா மற்றும் அத்தனகலு ஆற்றுப் பகுதிகளில் குறைந்தளவே மழை பதிவாகியுள்ளதால், தற்போது வரை எவ்வித வெள்ளப் பெருக்கு அச்சுறுத்தலும் இல்லை-என்றார். (அ)

# கல்முனை விபத்து: ஒருவர் உயிரிழப்பு

## மற்றொருவர் அவசர சிகிச்சைப் பிரிவில்



அம்பாறை, ஒக. 04

அம்பாறை மாவட்டம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அருகிலுள்ள கல்முனை - பாண்டிருப்பு பிரதான வீதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிறிய பட்டா ரக வாகனம், கல்முனை தாழவட்டுவான் சந்திக்கு அருகில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் அமைந்திருந்த அபிவிருத்தி லொத்தர் விற்பனை நிலையத்திற்குள் புகுந்தது.

விபத்தின் தாக்கத்தால் லொத்தர் விற்பனை நிலையம் கடுமையாக சேதமடைந்ததுடன், அங்கிருந்த தூண்கள் மற்றும் மின்விளக்குகளும் சேதமடைந்துள்ளன.


வாகனச் சாரதிக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த வாகனச் சாரதியும், லொத்தர் விற்பனை நிலையத்தில் இருந்த ஒருவரும் அப்பகுதி மக்களின் உதவியுடன் மீட்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி வாகனச் சாரதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் பொலன்னறுவை பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரது சடலம் கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# கேகாலையில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து!

## 20 பேருக்கு காயம்







கொழும்பு, ஒக. 04

கேகாலை, கரண்டுபன சந்தியில் நேற்று திங்கட்கிழமை காலை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஸூம் தனியார் பஸ்ஸூம் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் சுமார் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 6:15 மணியளவில் கேகாலை, கரண்டுபன சந்தைப் பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

ரம்புக்கணையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸூம், திகணவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸூம் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் காயமடைந்த 20 பேரும் உடனடியாக மீட்கப்பட்டுச் சிகிச்சைக்காகக் கேகாலை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்துக்கான காரணம் குறித்து கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# சம்மாந்துறையில் ஐஸுடன் ஒருவர் கைது!

அம்பாறை, ஒக. 04

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கருவாட்டுக்கல் 03 பகுதியில் உள்ள வீடொன்றை சுற்றிவளைத்து சோதனை மேற்கொண்ட சம்மாந்துறை பொலிஸார், 10 கிராம் 970 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 32 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இளைஞர்களை குறிவைத்து ஐஸ் போதைப் பொருள் விற்பனை இடம்பெறுவதாகக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, பிளாஸ்ரிக் குழாயில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 970 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், ஒரு மோட்டார் சைக்கிள், கைபேசி மற்றும் ஒரு இலத்திரனியல் தராசு ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

மாணவிகளுக்குத் தொந்தரவு:

# எட்டு மோட்டார் சைக்கிள்களுடன் இளைஞர்கள் பொலிஸாரால் கைது!

அம்பாறை, ஒக. 04

தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவிகளை மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்து தொந்தரவு செய்தமை மற்றும் தலைக்கவசம் அணியாமல் போக்குவரத்து விதிகளை மீறிப் பயணித்தமை தொடர்பாக பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 8 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நபர்கள் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்ல மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரி ஆராய்ச்சி ஆகியோரின் வழிகாட்டலின் கீழ், சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த பிரதீப் குமார, போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி விஜயவர்தன ஆகியோர் தலைமையில் இந்த விசேட அதிரடி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட காணொளிகள் மற்றும் புகைப்பட ஆதாரங்களின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த பிரதீப் குறிப்பிடுகையில்-"பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான காணொளி மற்றும் புகைப்பட ஆதாரங்களை பொதுமக்கள் உடனடியாகப் பொலிஸாருக்கு அனுப்பி வைக்க வேண்டும். தவறு செய்பவர்கள் எவராக இருந்தாலும் பாரபட்சமின்றிச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்மாந்துறையை ஒழுக்கமும் சட்டமும் நிலவும் பாதுகாப்பான சமூகமாக மாற்றுவதே எமது நோக்கமாகும். இளைஞர்கள் போக்குவரத்து விதிகளை மதித்து நடக்க வேண்டும்.

பெண்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயல்கள் கடுமையாகக் கருதப்படும்.- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கண்டி, நுவரெலியா...

கண்டிமாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவும் கடும் மழை மற்றும் சீரற்ற வானிலை நிலையை கருத்தில் கொண்டு, மாவட்டத்தி லுள்ள அனைத்து அரச பாடசா லைகளுக்கும் இன்று விடுமுறை வழங்க மாவட்ட நிர்வா கம் தீர்மானித்துள் ளது.

அதேவேளை, நுவரெலியா மாவட்டத்திலுள்ள அனைத்து அரச பாடசாலைகளும் இன்று மூடப்பட வுள்ளதாக நுவரெலியா கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார்.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக் கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைகளை மீண்டும் திறக்கும் திகதி மற்றும் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான மேலதிக அறிவு றுத்தல்கள் பின்னர் உரிய அதிகாரிகளால் அறிவிக்கப் படும் என்றும் கல்விப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## ஜனாதிபதி, பாராளுமன்ற...

அரசியலமைப்பின் ஆங்கிலப் பிரதியில் ஜனாதிபதி மற் றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை ஆறு ஆண்டு களுக்கு மேல் நீடிக்க மக்கள் வாக்கெடுப்பு அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், சிங்களப் பிரதி யில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அதிகரிக்கவோ குறைக்கவோ மக்கள் வாக்கெடுப்பு தேவை என குறிப்பி டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மக்கள் வாக்கெடுப்பு இன்றி ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை குறைத்ததால் அது செல்லுபடியாகாது என சில சட்டத் தரணிகள் வாதிடுவதாகவும், இது தொடர்பில் உயர் நீதி மன்றத்தின் கருத்தை பெற வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தயாசிறி ஜயசேகர கூறி யுள்ளார்.

இந்த விவகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவ ரால் ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு செல்லப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இந்த விடயத்தில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (அ)

## நீதிபதிகள் ஓய்வு வயது...

அவர் தெரிவித்தார்.

மகாநாயக்கர்களின் இந்த நிலைப்பாட்டை முன்னிட்டு, நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிக்கும் அரசாங் கத்தின் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது சிரமமாக இருக்கும் என ராஜீவ் அமரசூரிய கருத்து வெளியிட்டார்.

நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மற்றும் அரசியல மைப்புத் திருத்தம் தொடர்பான இந்த விவகாரம் அரசி யல் மற்றும் சட்ட வட்டாரங்களில் தொடர்ந்தும் கவ னம் பெற்றுவருகிறது. (அ)

## மஹர சிறைச்சாலை...

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பதற் றநிலையைத் தொடர்ந்து வன்முறையில் தொடர்புடை யதாக அடையாளம் காணப்பட்ட 104 கைதிகள் தும்பர, வெலிக்கடை, பூஸா, களுத்துறை, பதுளை, மட்டக்க ளப்பு மற்றும் பொலனறுவை உள்ளிட்ட ஏழு சிறைச்சா லைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மோதலின்போது சிறைச்சாலையின் பல கட்டடங்க ளின் ஓடுகள் உடைக்கப்பட்டு, கூரைகள் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன், புனர்வாழ்வுத் திட்டங்களின் கீழ் தையல் பயிற்சிக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங் களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும், நள்ளிரவு வரை கைதிகள் சிறைச்சாலை வளாகத்திலிருந்து வெளிப்புறத்தை நோக்கி கற்களை வீசி தாக்குதல் நடத்தியதால், அருகி லுள்ள சில வீடுகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில், "சாத்தான்", "அசார்", "பட்டா" உள்ளிட்ட சில கைதிகள் இணைந்து பதற்றநி லையை வழிநடத்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தே கம் வெளியிட்டுள்ளனர். சம்பவத்திற்கான உண்மையான காரணங்களைக் கண்டறியும் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே, மஹர சிறைச்சாலையில் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகளின் காரணமாக இன்று முதல் மூன்று நாட்களுக்கு கைதிகளைப் பார்வையிடுவதற்கு தற்காலிகத் தடை விதிக்க சிறைச்சாலைகள் திணைக்க ளம் தீர்மானித்துள்ளது.

ஆரம்பகட்ட தகவல்களின்படி, சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் பரிமாற்றத்தை கட்டுப்படுத்த சமீபத் தில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான நடவடிக்கைக ளால் ஏற்பட்ட போதைப்பொருள் தட்டுப்பாடே இந்த வன்முறை வெடிக்க முக்கிய காரணமாக இருக்கக்கூடும் என விசாரணை அதிகாரிகள் சந்தேகிப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது. (அ)

## சீரற்ற காலநிலை;...

எதிர்கொள்ளும் வகையில், 700 கடற்படை வீரர்களைக் கொண்ட 171 அனர்த்த நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அதிக ஆபத்தான பகுதிகளில் வசிக்கும் மக்களை அவ சியம் ஏற்பட்டால் பாதுகாப்பான இடங்களுக்கு வெளி யேற்றுவதற்கும், அவர்களை இடமாற்றம் செய்வ தற்கும் இந்தக் குழுக்கள் தயாராக இருப்பதாக கடற்படை குறிப் பிட்டுள்ளது.

மேலும், சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் உயிர்களை பாதுகாக்கவும், தேவையான உதவிகளை வழங்கவும் நிவாரண நடவடிக் கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வும் கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

## ஒகஸ்ட் 6இற்கு பின்...

சூறாவளியின் தாக்கத்தால், ஒகஸ்ட் 6 ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டில் மீண்டும் மழை மற்றும் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் என்றும், குறிப்பாக மத்திய மலைநாட் டின் மேற்கு சரிவுப் பகுதிகளில் ஓரளவு பலத்த மழை பெய்யும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அதிகளவு மழை பதிவாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து, வளிமண்டலவியல் திணைக்களம் வெளி யிடும் வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கை களை தொடர்ந்து கவனித்து, தேவையான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக் களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (அ)

## வடக்கு மாகாண சுகாதார...

தினமும் மூன்று அமர்வுகளாக மதிப்பீட்டு நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்ற னர்.

இதேவேளை, இதுவரை நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் கிடைக்காத விண்ணப்பதாரர்கள் நாளை 5ஆம் திகதிக்குப் பின்னர் 021 222 0807 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு, தங்க ளது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை வழங்கி தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## 40 மில்லியன் ரூபா நிதி...

கலந்துரையாடினார்.

கசூரினா கடற்கரையில் மூன்று கபனா, சிறுவர் பூங்கா, படகு சவாரிக்கான இறங்குதுறை வசதிகள் மற்றும் பொலிஸ், சுற்றுலா தகவல் மையம் உள்ளிட்ட சேவை களை ஒரே இடத்தில் அமைக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் சுற்றுலாத்துறையை உலகளாவிய தரத்திற்கு கொண்டு செல்வதற்கான முக்கிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், அவை 2027 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், காங்கேசன்துறை, சாட்டி கடற்கரை மற்றும் நெடுந்தீவு உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களை சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகை யில் விரைவாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான நிதி ஒதுக் கீட்டில் எந்தவித தடையும் இல்லை என்றும், பணிகளை உடனடியாக ஆரம்பிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள் ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்த விஜயத்தில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், எஸ். பவானந்தராஜா, ஜெ. ரஜீவன், வைத்தி யர் விவேகானந்தா, பிரதேச செயலக அதிகாரிகள் மற் றும் கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ)

## மூன்றாம் காலாண்டில்...

துறையின் தற்போதைய செயற்பாட்டு நிலை உள்ளிட்ட பல்வேறு காரணிகளை கருத்தில் கொண்டு இந்த மதிப் பீடு மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள் ளது.

இதன்படி, 2026 ஆம் ஆண்டு ஜூலை முதல் செப் ரெம்பர் வரையிலான மூன்றாம் காலாண்டில் மின்கட் டணங்களில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டணத் திருத்தம் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் போது நுகர்வோரின் நலன் மற்றும் மின்சார விநியோகத்தின் நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு முன்னு ரிமை வழங்கப்படுவதாக இலங்கை பொதுப்பயன்பாடு கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## 6 தமிழ் பேசும் கட்சிகளு...

மலையக மக்களின் காணிப் பிரச்னைகள் குறித்து கட்சித் தலைவர்கள் கவலை வெளியிட்டனர். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, எல்லை நிர்ணய ஆணைக்குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்விடயங்களில் தொடர்ந்து கலந்துரையாடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலா ளர் எம்.ஏ. சுமந்திரன், புதிய அரசியலமைப்பு பரந்த சமூக உரையாடலின் மூலம் உருவாக்கப்பட வேண்டும் என் றும், ஒரு தரப்பினரால் அவசரமாக முன்னெடுக்கப்படும் அரசியலமைப்பு மாற்றங்கள் கடந்த கால அனுபவங்களை மீண்டும் ஏற்படுத்தக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, நிறைவேற்று ஜனாதி பதி முறை நீக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு எனத் தெரிவித்தார். அதேவேளை, உடனடி அரசியலமைப்பு மாற்றத்தை விட அனைத்து சமூகங்களையும் இணைக்கும் புதிய மக்கள் இணக்கப் பாடு உருவாகுவது முக்கியமானது என்றும், அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைந்து வாழும் அடித்தளம் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் உருவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மலையக மக்களின் காணி உரிமைகள் தொடர்பில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் வி. இராதா கிருஷ்ணன், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பணி யாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணிக்கான சட்டபூர்வ உரிமையை வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தை வர வேற்றார். 2042 ஆம் ஆண்டுக்கு முன்னர் தோட்ட நிறு வனங்களுடனான ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படவுள்ள நிலையில், புதிய ஏற்பாடுகளின் கீழ் மலையக மக்களுக்கு சட்டபூர்வ காணி உரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப் படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்திய உதவியுடன் முன்னெடுக்கப்படும் வீடமைப் புத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. வீட்டு உரிமை பெற்ற பின்னரும் மின்சாரம், நீர் கட்ட ணங்களைச் செலுத்துவதில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலை வர் ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, 2027 வரவுசெலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்ட மைப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்றும், 2027 மற்றும் 2028 ஆண்டுகளில் இரண்டு கட்டங்களாக போரால் இடம்பெயர்ந்த மக்களுக்காக 13,000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்றும், அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் கிடைக்கும் வரை தற்காலிக வீடுகள் மற்றும் வீட்டு வாடகை உதவித் தொகை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், வடக்கு மற்றும் மலையகப் பகுதிகளின் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆணைக்குழுக் கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், காணி மக்களுக்கே சொந்தமானதாக இருக்க வேண்டும் என்பது அரசாங்கத் தின் கொள்கை என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். தொல்பொருள் திணைக்களம், வன பாதுகாப்புத் திணைக் களம் மற்றும் மகாவலி அதிகார சபை போன்ற நிறுவனங் கள் காலாவதியான கொள்கைகளின் கீழ் செயல்படுவ தால் வடக்கு, கிழக்கு மக்களுக்கு சிரமங்கள் ஏற்பட்டுள் ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இறுதியாக, தமிழ் பேசும் மக்களின் பொதுப் பிரச்னை களை ஒன்றிணைந்து கலந்துரையாடிய அரசியல் கட்சிக ளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, சமூகப் பிளவுகளைத் தவிர்த்து மக்களின் பொதுவான தேவைகளுக்கு முன்னு ரிமை அளிக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)

## கோட்டாவின் மனு மீதான...

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# யோஷித, கரன்னகொடவுக்கு எதிராக எட்டு குற்றச்சாட்டுகள்

## மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஓக. 04

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளது.

2006 செப்ரெம்பர் 1 முதல் 2007 ஜூன் 8 வரையான காலப்பகுதியில் கடற்படைத் தளபதியாகப் பதவி வகித்த வசந்த கரன்னகொட, யோஷித ராஜபக்ஷவை பிரித்தானிய அரச கடற்படை பயிற்சி கல்லூரியின் பாடநெறியில் சட்டவிரோதமாக பங்கேற்கச் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த சட்டவிரோத நடவடிக்கையின் மூலம் அநியாயமான நன்மையைப் பெற்றுக்கொண்டதாக யோஷித ராஜபக்ஷவுக்கும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இரு பிரதிவாதிகளுக்கும் எதிராக மொத்தம் எட்டு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகைகளை கையளிப்பதற்காக இரு பிரதிவாதிகளுக்கும் விரைவில் கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பவுள்ளதாக நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# ஊடகவியலாளர்கள் காப்புறுதி திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்!

## வவுனியாவில் ஊடகத்துறை பிரதி அமைச்சர்

வவுனியா, ஓக. 04

ஊடகவியலாளருக்கான காப்புறுதித் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த உள்ளதாக வெகுஜன ஊடகத்துறை பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின் வவுனியா ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிராந்திய ஊடகவியலாளர்கள் செய்தி அறிக்கையிடலின்போது எதிர்நோக்கும் கஷ்டங்கள் தொடர்பில் எமக்கு தெரியும். ஊடகவியலாளருக்கான கொடுப்பனவுகள் தொடர்பில் அரச ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடி அதற்கான தீர்வுகளைப் பெற முடியும். ஏனைய ஊடக நிறுவனங்களும் சரியான முறையில் ஊடகவியலாளருக்கான கொடுப்பனவுகளை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

ஊடகவியலாளருக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் கொண்டு வரவுள்ளேன். இதனை ஒரு வருடத்திற்கு மட்டும் வழங்காது தொடர்ச்சியாக வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கான புலமைப்பரிசில்கள், கடன் திட்டங்கள வழங்குவது தொடர்பில் ஊடகவியலாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நாம் பரிசீலித்து சிறந்த தீர்வை வழங்கவுள்ளோம்.

கலைஞர்களுக்கான வீட்டுத் திட்டங்கள நடைமுறைப்படுத்தும்போது ஊடகவியலாளர்களுக்கும் வீட்டுத்திட்டத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எமது அரசாங்கம் 2029 ஆம் ஆண்டுக்குள் வீடற்ற அனைவருக்கும் வீட்டுத் திட்டத்தை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைவாக ஊடகவியலாளருக்கும் ஏதோ ஒரு வகையில் வீட்டுத்திட்டம் கிடைக்கும்.

அத்துடன், கடத்தப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட, கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான பிரச்னைகள் 20 வருடங்களுக்கு மேலாக உள்ளது. நாம் பல வழக்குகளை தற்போது துரிதப்படுத்தி நீதியைப் பெற்றுக் கொடுக்கின்றோம். தேங்கியுள்ள வழக்குளை துரிதமாக முடிப்பதற்காகவே நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீடிக்க யோசனை முன்வைத்துள்ளோம். கடத்தப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான பிரச்னைகளுக்கு நீதியைப் பெற ஆதாரங்கள் பல இல்லை. அவற்றை திரட்ட வேண்டியுள்ளது. அவை தொடர்பான விசாரணைகள் இடம்பெறும். ஆதாரங்கள் தேவை. அதன் மூலமே நீதியைப் பெற முடியும்-என்றார்.

# சிறைச்சாலை மோதல்களின் பின்னணியில் வெளிக்கரங்கள்?



## தீவிர விசாரணைக்கு நீதி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஓக. 04

மஹர மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளில் அண்மையில் இடம்பெற்ற அமைதியின்மைச் சம்பவங்கள் தொடர்பில் வெளித் தரப்பினரின் தலையீடு உள்ளதா என்பது குறித்து தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டிருந்த நிலையில், மஹர சிறைச்சாலையில் கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.


எனவே, இரண்டு சம்பவங்களின் தன்மையும் முற்றிலும் வேறுபட்டவை என அவர் விளக்கமளித்தார்.

சிறைச்சாலைகளுக்கு வெளியே உள்ள சில தரப்பினர் திட்டமிட்டு இவ்வாறான கலவரங்களைத் தூண்டிவிடுகிறார்களா என்ற பலமான சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் இத்தகைய சம்பவங்கள் தற்செயலாக நடைபெறுவதில்லை என்றும், இதன் பின்னணியில் உள்ள நபர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என்றும் கூறினார்.

அரசாங்கம் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளால் சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் செல்வது கணிசமாகக் குறைந்துள்ளதாகவும், அதுவும் பதற்ற நிலை உருவாக ஒரு காரணமாக இருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். மேலும், நீண்ட காலமாக நிலவி வரும் சிறைச்சாலை நெரிசலும் இத்தகைய சம்பவங்களுக்கு முக்கிய காரணமாக உள்ளதாகவும், அதற்கான நிரந்தரத் தீர்வுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும் கூறினார்.

மஹர சிறைச்சாலை அமைதியின்மையின்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு எதிராக சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதியளித்தார். (அ)

# ரத்கம கடற்கரையில் ஒதுங்கிய கொள்கலன்!



கொழும்பு, ஓக. 04

ரத்கமவின் ஒவகந்த பகுதியில்,நேற்றுக் காலை கரை ஒதுங்கிய நிலையில் வெள்ளை நிறத்திலான கொள்கலன் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

கொழும்பு கடற்கரைக்கு அப்பால் ஒரு கப்பலிலிருந்து கடலில் விழுந்த வெற்றுக் கொள்கலனாக இது இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகக் பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்கம பொலிஸாரின் தகவலைத் தொடர்ந்து, தெற்கு மாகாண கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் அந்தக் கொள்கலனைப் பார்வையிட்டனர்.

பின்னர், கடற்கரையில் சிதறிக் கிடந்த 'ரெஜிபோர்ம்' துண்டுகள் உள்ளிட்ட கழிவுப் பொருட்களை அவர்கள் அகற்றினர்.

இச்சம்பவம் குறித்து அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# மகாவலி ஆற்றுப் படுகைக்கு சிவப்பு வெள்ள எச்சரிக்கை!

கொழும்பு, ஓக. 04

மகாவலி ஆற்றுப் படுகைக்கு அடுத்த 48 மணிநேரத்திற்கு கடுமையான வெள்ள அபாயம் நிலவக்கூடும் எனத் தெரிவித்து, நீர்ப்பாசனத் திணைக்களம் சிவப்பு மட்ட வெள்ள எச்சரிக்கையை நேற்று பிற்பகல் 1.00 மணி முதல் வெளியிட்டுள்ளது. இந்த எச்சரிக்கை நாளை பிற்பகல் 1.00 மணி வரை அமலில் இருக்கும்.

மேற்பகுதி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துள்ள கன மழை, தொடர்ந்தும் மழை பெய்யும் எனக் கணிக்கப்பட்டுள்ளமை மற்றும் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்படக்கூடிய சாத்தியம் ஆகியவற்றால் வெள்ள அபாயம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உடுநுவர, உடபலாத்த, யட்டிநுவர, தொலுவ, கொத்மலை, பஸ்பாகே, கங்கா இஹல கோரளை, பஸ்பாகே கோரளை, கங்கவட்ட கோரளை, ஹரிஸ்பத்துவ மற்றும் பாததும்பர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட தாழ்நிலப் பகுதிகளுக்கு இந்த எச்சரிக்கை பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருந்து தேவையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. மேலும், தொடர்ந்தும் மழை பெய்யக்கூடும் என்பதால் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இயக்கச்சியில் வான் மோதி குடும்பப் பெண் படுகாயம்!

கிளிநொச்சி, ஓக. 04

கிளிநொச்சி, இயக்கச்சி பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று நண்பகல் 12.00 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வீதியோரத்தில் நின்றுகொண்டிருந்த பெண் மீது அதே திசையில் பின்னால் வந்த ஹயஸ் ரக வாகனம் மோதியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் பலத்த காயமடைந்த பெண், அப்பகுதி மக்களின் உதவியுடன் உடனடியாக மீட்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# இரணைமடுக் குளக்கரை அருகே எரிந்த நிலையில் ஆணின் சடலம்!

## பல கோணங்களில் பொலிஸார் விசாரணை

கிளிநொச்சி, ஓக. 04

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைமடுக் குளக்கரையை அண்மித்த பகுதியில் நேற்று எரிந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று காலை அப்பகுதி வழியாகச் சென்ற பொது மக்கள், குளக்கரைக்கு அருகில் எரிந்த நிலையில் சடலம் கிடப்பதைக் கண்டு உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சடலத்தை மீட்டு முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், இது தற்கொலையா அல்லது கொலை செய்யப்பட்ட பின்னர் சடலம் தீயிட்டு எரிக்கப்பட்டதா என்ற பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் சான்றுகளை சேகரித்து வருகின்றனர். நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து சடலம் பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பப்படவுள்ளதாகவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்வதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.08.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media